**கரைச்சி பிரதேச சபை**

---

**கிளிநொச்சி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 28 மார்ச் 2018 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 24 ஆகஸ்ட் 2018 இல் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரைச்சி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் அவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலிருந்த களஞ்சிய இருப்புக்களின் பெறுமதி ரூபா 261,940 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டமையால் சபையின் வருடாந்த இலாபம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 261,940 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் மோட்டார் கிறேடரினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக பெறப்பட வேண்டியிருந்த வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 54,700 நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லையாதலால் மீளாய்வாண்டுக்கான இலாபம் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை அத்தியாயம் XXIV இன் பிரிவு 4 | 405,009 | பதவியில் இருந்து வறிதாக்கப்பட்ட 09 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இடர் கடன் மற்றும் விழா முற்பணம் என்பவற்றின் நிலுவைகளினை கடந்த 01 தொடக்கம் 07 வருடங்களாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 502, 507 | | நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி 571 | 852,217 | 29 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக கடந்த இரு வருடங்களுக்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 67,364,113 தொகையான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 85,704,856 ஆக இருந்தது.

### 2.2. வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான முலம் | | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 200,000 | - | - | - | 150,000 | - | | - |
| (ii) | வாடகைகள் | 32,180,000 | - | 39,038,907 | 3,903,276 | 33,958,960 | - | 33,096,769 | 3,280,826 |
| (iii) | உரிமங்கள் | 5,406,000 | - | 6,646,677 | - | 6,019,700 | - | 5,705,812 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 24,032,870 | - | 35,125,894 | 31,952,585 | 25,150,400 | - | 44,610,207 | 30,445,168 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பதவியணியிலுள்ள வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட 114 பதவியினர்களில் 102 ஆளணியினர்கள் உள்ளனர். இதன் காரணமாக 12 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டிய வேலைகள் பாதிப்படைந்திருந்ததுடன் 04 பதவியணியினர்கள் மேலதிகமாக பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்

**(ஆ) ஊழியர் கடன்கள்**

பதவியில் இருந்து வறிதாக்கப்பட்ட 09 உத்தியோகத்தர்களின் பதவியினர் கடன் நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 405,009 01 தொடக்கம் 07 வருடங்களாக அறவிடப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்றிட்டத் தாமதங்கள்

மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 1,817,682 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 06 மூலதன வேலைத் திட்டங்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டிருக்காது சில்லறைக் கடன்கொடுனர் கணக்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 200,000 தொடக்கம் ரூபா 20,614,925 அல்லது 100 சதவீதம் தொடக்கம் 198 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம், என்பவற்றுக்கிடையே ரூபா 145,122 தொடக்கம் ரூபா 9,199,465 அல்லது 17 தொடக்கம் 58 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சொத்துக்கள்/ ஆதனம் | (i) | பயன்பாடற்ற நிலையில் உள்ள 12 வாகனங்களையும் பயன்படுத்தக் கூடிய நிலையில் மாற்றியமைப்பதற்கு தவறியமை. |
| | (ii) | சபைக்கு உடமையாக்கப்பட்டிராத 30 வாகனங்கள் கடந்த 05 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தமை |
| (இ) மனித வளங்கள் முகாமைத்துவம் | | வெற்றிடமாயுள்ள பதவியணிக்கு உரியவாறு ஆட்சேர்ப்பு செய்யத் தவறியமை. |